# கூத்தரங்கக் கற்கைநெறிப் பின்புலத்தில் கூத்து மீளுருவாக்கம் பற்றிய திரிபுபடுத்தல்களும் தெளிபுபடுத்தல்களும்

சு. சந்திரகுமார்[1*]

கூத்தரங்கு தமிழர் பண்பாட்டு வாழ்வியல் அடையாளங்களை நிலைநிறுத்தி வைத்திருக்கும் மக்கள் கலையாகும். இது செயற்படுவதனூடாக கூத்தர்களையும் அதன் வாழ் சமுதாயத்தையும் கொண்டாடி மகிழவைக்கும் பொறிமுறையைக் கொண்டது. இதனால் சமுதாய ஒருங்கிணைவும் கூத்தரது நிபுணத்துவ வெளிப்பாட்டையும் கூத்தரங்கின் ஆடுகளத்தில் இயல்பாக காணலாம். இன்றைய உலகமயமாக்கற் சூழலில் மனிதர்கள் தனியன்களாக்கப்பட்டு நுகர்வுப் பண்பாட்டில் வாழ்கின்றமையே நிலவுகின்றது. ஒன்று கூடி செயற்பட்டு மகிழ்தல் அவசியமான இந்தச் சூழலில், பாரம்பரிய கலை பண்பாட்டு நிகழ்வுகளும் பங்குபற்றல்களும் பெரும் பங்காற்றுகின்றன. கூத்தரங்கின் கற்கை நெறிப் பின்புலத்தில் அதன் தொடர் செயற்பாட்டினையும் அதன் திறந்தவெளிப் பயில்களத்தினையும் கூத்தர் சமுதாயத்தினையும் முன்னிலைப்படுத்தி, சமகாலச் சமூகத்தின் தேவைக்கேற்ப ஆராய்ச்சியினூடாகவும் செயல்மையத்தினூடாகவும் முன்மொழியப்பட்டு பயில்நிலையில் உள்ள புதிய அரங்கப் போக்கே கூத்து மீளுருவாக்குமாகும். இது 2002 இல் மட்டக்களப்பு சீலாமுனைக் கிராமத்தை மையமாகக் கொண்டு பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டினூடாக சி.ஜெயசங்கரால் முன்மொழியப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது கல்வியியலரங்கு, தளைநீக்கும் அரங்கு, சமூகக் குழுமஅரங்கு, சிறுவர் கூத்தரங்கு, உளச்சிகிச்சைக்கான அரங்கு என்பவற்றினைப் போன்ற புதிய அரங்கப்போக்காகும். கூத்தின் உள்ளடக்கதிலும் ஆற்றுகைகளிலும் கட்டுருவாக்கப்பட்டிருந்த பால், சாதி, சமஸ்கிருத, காலனிய ஆதிக்கங்களை உரையாடி, விவாதித்து சமகாலத்திற்குப் பொருத்தமான வகையில் அனைவரும் மகிழ்ந்து வாழக் கூடியவாறு கட்டவிழ்த்து மீள உருவானதே மீளுவாக்கமாகும். இது தேசிய, சர்வதேச ரீதியில் பரவலாக்கப்பட்டுள்ளது. ஜனநாயகத் தன்மை கொண்ட இக்கோட்பாடு விமர்சனபூர்வமாக ஒன்றை அனுகுவதற்குரிய சாதனமாகவும் உள்ளது. இது இடைவிடாத செயற்பாடாகவும் செயல்வாதமாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. அரங்குசார் புலமையாளர்கள் சிலரால் இக்கோட்பாடு திரிபுபடுத்தப்படுகின்றது. அறிவுபூர்வமற்ற விமர்சனங்களைக் கையாண்டு தாம் ஆற்றுப்படுத்தும் ஆய்வுகளினூடாக நிராகரிப்பது, கூத்து மீளுருவாக்கத்தின் சமகால தேவை உணர்ந்து கல்விப்பரப்பில் பேசப்படும்போது அதனைத் தானே செய்ததாகக் கூறவைப்பது, சு.வித்தியானந்தனால் 1960களில் இடம்பெற்றது எனப் பரப்புவது போன்ற நவீன அறிவின் அதிகாரப் பார்வையில்நின்று திரிபுபடுத்துவது

[1]நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
srckumar20@yahoo.com

கல்விப்பரப்பில் நிலவுகின்றது. இது தொடர்பான தெளிவையும் நியாயப்பாட்டையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வாகும். ஆய்வின் நோக்கம் கூத்தரங்கக் கற்கைப்புலத்தில் கூத்து மீளுருவாக்கம் பற்றிய தெளிவைத் தருதலும் அது பற்றிய திரிபுபடுத்தலை தெளிவுபடுத்தலும். ஆய்வுப் பிரச்சினை கூத்துமீளுருவாக்கம் பற்றிய திரிபுபடுத்தல்கள் பற்றியதாகும். தகவல் சேகரிப்பு நேர்காணல், கலந்துரையாடல், எழுத்துக்கள் மூலம் பெறப்பட்டது. ஆய்வு முறையியல் விமர்சன ஆய்வு, ஒப்பீட்டாய்வு, வரலாற்றாய்வு என்பன பயன்படுத்தப்படுகின்றது.

*திறவுச்சொற்கள்: கூத்து, கூத்தரங்கு, கூத்துமீளுருவாக்கம், திரிபுபடுத்தல்*